ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

# 2023 வருடத்திற்கு வழங்குநர்களை பதிவு செய்தல்

2023 ஆம் வருடத்திற்கு பண்டங்கள், மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் பதிவு செய்து கொள்ள விரும்பும், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் மதியுரை சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

**தொகுதி எண்**

1. **இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள்/ நிர்மாணவேலை மற்றும் பொருத்தல்கள்**
   - 1.1. வளிச்சீராக்கல் இயந்திரங்கள்
   - 1.2. CCTV கட்டமைப்பு
   - 1.3. பாதுகாப்பு சமிஞ்சை கட்டமைப்பு.
2. **சந்தைப்படுத்தல்/ விற்பனை மேம்படுத்தல்**
   - 2.1. பெயர்ப் பலகை, மொனபோல் மற்றும் பைலோன் (Monopol/Pylon)
   - 2.2. கிளை வியாபார குறியிடல் (Branding)
   - 2.3. Digital flex மற்றும் Sticker அச்சிடல் வேலைகள். (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு செய்தல்)
3. **அச்சிடல் வேலைகள்**
   - 3.1. சகல விதமான கடித உறைகள்.
   - 3.2. சகல விதமான மாதிரி படிவங்கள், பதிவேடுகள் (Registers) மற்றும் புத்தகங்கள்.
   - 3.3. சகல விதமான விளம்பர பிரசுரங்கள்.
   - 3.4. பாஸ் புத்தகங்கள் மற்றும் Plastic உறைகள்.
   - 3.5. பாதுகாப்பு அச்சிடல் வேலைகள். (நிலையான வைப்புச் சான்றிதழ் மற்றும் PIN Mailer)
   - 3.6. கணனி அச்சிடல் கடதாசி (Continue Sheet)
4. **நானாவித பொருட்கள் (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு செய்தல்)**
   - 4.1. சகல காகிதாதிகள், உபகரணங்கள்
   - 4.2. அச்சு Cartridges & Ribbon & Toner
   - 4.3. கணனி காகிதாதிகள் (Black light கையொப்ப கடதாசி, மற்றும் Carbonised & Thermal அச்சுக் கடதாசி (ATM,CDM,Palm Top)
   - 4.4. ப்ளாஸ்டிக் கவர் (Plastic Covers) (Pass book cover ATM card cover)
   - 4.5. கிருமிகள் கட்டுப்பாடு மற்றும் அழித்தல் (Pest control)
   - 4.6. குடிநீர் போத்தல்கள் வழங்குதல். (Bottled Drinking Water) 19 லீட்டர் மற்றும் ஏனையவை
5. **கட்டிட நிர்மாணம் மற்றும் ஒப்பந்தம்**
   - 5.1. கட்டிடங்கள்.
   - 5.2. அலுமினிய வேலைகள் மற்றும் பொருத்தல்கள்.
   - 5.3. கிளை உள்ளக பொருத்தல்கள்.
   - 5.4. வலையமைப்பு பின்னல்கள் (Networking) மின்சார கம்பி பொருத்தல்கள் (Electrical wiring)
6. **ஏனைய சேவைகள் (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு செய்தல்)**
   - 6.1. மோட்டார் வாகன புனர்நிர்மாணம்.
     - 6.1.1. இயந்திர புனர்நிர்மாணம்.
     - 6.1.2. மின்னியல் புனர்நிர்மாணம்.
     - 6.1.3. Tinkering & Spray Painting
   - 6.2. வாகன பராமரிப்பு மற்றும் சேவை செய்தல்.
   - 6.3. வளிச்சீராக்கி இயந்திர பராமரிப்பு மற்றும் சேவை.
   - 6.4. CCTV பராமரிப்பு மற்றும் சேவை.
   - 6.5. பாதுகாப்பு சமிஞ்சை கட்டமைப்பு புனரமைப்பு
   - 6.6. பெயர்பலகை, Monopole புனரமைப்பு

**கவனத்தில் கொள்ளவும்**

ஒப்பந்தங்களுக்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA/ முன்னைய ICTAD அல்லது தேசிய நிர்மாண அதிகார சபையின் NCASL) அவ்வவ் துறைகளுக்கு செல்லுபடியாகும் பதிவுகளை பெற்றிருத்தல் மற்றும் செல்லுபடியாகும் வியாபார பெயர் பதிவுடன் அது தொடர்ந்தேர்ச்சியாக அண்மிய மூன்று வருடங்களுக்கு இருக்க வேண்டும்.

**வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்**

**சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

1. விண்ணப்பதாரிகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபாரிகளாக ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் வியாபார முகவரியில் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் வசதியிருப்பின் மிகவும் உகந்தது. (வியாபார பெயர் பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)
2. ஒப்பந்ததாரர்களுக்கு செல்லபடியாகும் CIDA அல்லது NCASL பதிவு இருக்க வேண்டும். (முன்னைய ICTAD)
3. தேசிய மட்டத்திலான விண்ணப்பதாரிகள் அரச திணைக்களங்கள், சட்ட பூர்வ சபைகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் வியாபார நிறுவனங்களில் அண்மிய வருடங்களில் இவ்வாறான கட்டளைகளைப் பெற்ற திருப்திகரமான வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றியுள்ளதாக எழுத்துமூல சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டும். அண்மிய 03 வருட காலப் பகுதியில் பெற்றுக்கொண்ட கட்டளைகள் பற்றிய தகவல்களை வழங்குவது மிகவும் உகந்தது.
4. இயந்திரம் மற்றும் உபகரணங்களை புனரமைத்தல் மற்றும் பொருட்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் உரிய புனரமைப்புகளை செய்வதற்கு தேவையான நேரங்களில் தொழிற்சாலை வசதிகளை தம்வசம் கொண்டிருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரிகள் ஒரு தடவையில் ரூபா 500,000/- இற்கு மேற்பட்ட கட்டளைகளை வழங்குவதற்கு எதிர்ப்பார்ப்பார்களாயின் அதற்கு தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்கள் உள்ளது என்பதை எழுத்துமூல சான்றுகளை காட்டவேண்டும் என்பதுடன் கடந்த மூன்று வருடங்களின் (2019,2020,2021) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் நிழற்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பப்படிவங்களை எமது www.rdb.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளும் வசதி விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.
7. ஒரு தொகுதியின் கீழ் உள்ள உப தொகுதிகளுக்கு ஒரே படிவத்தில் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் **அனைத்து பிரதான தொகுதிகளுக்கும் மீளளிக்கப்படாத ரூபா 1,000/- (SSCL+VAT) வீதம் (பிரதான 06 தொகுதிகளுக்கும் வேறாக பதிவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.) பதிவுக் கட்டணம் விண்ணப்பப்படிவங்களை பாரமளிக்கும் போது ரொக்கப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.** ஒவ்வொரு உப தொகுதியும் தெளிவாக காட்டப்பட வேண்டும்.
8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2022.11.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரதான மனிதவள அதிகாரி, பிரதேச அபிவிருத்தி வங்கி, பிரதான அலுவலகம் இலக்கம் 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனியில் அல்லது மத்திய, ஊவா, கிழக்கு, வடமேல், வடமத்திய, மேற்கு மற்றும் தெற்கு ஆகிய மாகாண அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று ஒப்படைக்க வேண்டும்.
9. விண்ணப்பப்படிவத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “வழங்குநர்களை பதிவு செய்தல் - 2023” மற்றும் தொகுதி எண் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
10. வியாபார பெயர் பதிவு சான்றிதழ், கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் (கடந்த மூன்று வருடங்களுக்குரியது) (பொருந்தும் என்றால்) இவ்வாறான கட்டளைகளை பெற்று திருப்திகரமாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றியுள்ளதாக எழுத்துமூல சாட்சிகள் (கொள்வனவு கட்டளைகள் அல்லது ஒப்பந்தத்தின் பிரதி. பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல்களின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகன் வழங்குநர்களாக பதிவு செய்யப்படமாட்டார்கள்.
11. அலுவலக ஊழியர்கள் அல்லது வாழ்க்கைத்துணை அல்லது அவர்களின் பிள்ளைகள் விண்ணப்பதாரியாக, உரிமையாளராக, பங்காளராக, இயக்குநராக உள்ள நிறுவனங்கள் வழங்குநராக பதிவு செய்யப்பட தகுதி பெறாது.
12. ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் மதிப்பாய்வுகளுக்கு உள்ளாக்கப்படும் என்பதுடன் வங்கியின் தீர்மானத்தின்படி தகுதிகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை பதிவு செய்யும் உரிமை வங்கிக்கு உரியது. தகுதி பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளுக்கு அதைப்பற்றி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களை முகாமையாளரை - பெறுகை 011-2025454 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதான மனிதவள அதிகாரி,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**பிரதான அலுவலகம்,**
**இலக்கம் 933, கண்டி வீதி, வெதமுல்ல,**
**களனி.**
**தொலைபேசி : 011-2035454**
**தொலைநகல் : 011-2906883**